முருகப்பெருமான் துணை

**மகான் முருக நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.03.2023,** சனிக்கிழமை

1. அதர்மம் நிலைகுலைந்து அழிந்து
அறமே வளர வெல்லவேணுமென
பூதலம் தன்னில் தர்மம் வளர்த்திட
பிரணவ சக்தியாய் அவதாரம் எடுத்த
2. எடுத்தநல் ஆறுமுக அரங்கனே
ஈடுஇணையிலா ஞானதேசிகனே
தடையற உன் வழி மக்கள்வர
தர்மம் தலை நிமிரும் எனக் கூறி
3. கூறியே அனுகூல ஆசிதனை
குறைவிலா சுபகிருது சேல்திங்கள்
ஈரைந்தோர் திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 11 ம் நாள், 25.03.2023, சனிக்கிழமை)
இயம்பிடுவேன் முருக நாயனார் யானும்
4. யானுரைக்க தீவினை ஆகவே
ஊழல் புரிந்து மக்களை
ஞானமிலா தேசமதின் வளத்தை
நசிவுற அபகரிக்கும் வஞ்சக
5. வஞ்சக ஆளுமை அதிகார
வர்க்கங்கள் தேசத்தை அரிக்கும்
பஞ்சமா கரையான்களாகும்
பாவங்களை எந்தவித மனக் குற்றமும்
6. குற்றமும் கருதா செய்துமே
கொழுத்து மிருகங்கள் போலே
ஆற்றலை மிகுதியாக்கி மக்களின்
அனைத்து சக்திகளை உறிஞ்சி வாழும்
7. வாழும் இன்னவர்களெல்லாம்
வதை கொள்ளும் விதமாக
காலனை வேலவன் தூண்டி
கட்டளையாகச் செயல்பட இருக்க
8. இருக்கவே காலம் கடத்திடா
இனியேனும் தன்னை மாற்றி
கருத்தாக உண்மை ஞான
கருணைபட ஜீவதயவு வழியில்
9. வழிதனில் தங்களை மாற்றி
வாழும் காலமே நல்லதை செய்து
பழிபாவம் நேரா வண்ணம்
பாதுகாப்பான சேவை கடமை என

10. கடமை என ஆற்றி சிறந்திட
கலியின் கொடுமையாக வரும்
இடர்கள் அனைத்தையும் வென்று
எல்லோரும் பாதகாப்பான வாழ்வாய்

11. வாழ்வாய் கண்டு ஆளுமையே
வடிவேலன் ஆசிபட மாறி
தாழ்விலா தேற்றம் உலகே காணும்
தவறை திருத்த உகந்த வாய்ப்பே இது
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–